# DEPOSITION OF WITNESS

---

**MCOP. No.** 5786/2025 **DATE:09.07.2026**

Deposition of Witness : P.W.2

Name : Mr.Mahalingam

Father Name :Mr.Chinnamoonji

Age :

Address :

Cell Phone No. :

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Act 44 of 1969) of the 09th day of July 2026.

-----------------------------------------------------------------------------------------------

**மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை**

நான் விபத்தினை கண்ணுற்ற சாட்சியாவேன். நான் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் கூறப்பட்டுள்ள விவரங்கள் என்னால் கூறப்பட்டவைதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னுடைய ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். அது மசாஆ 28.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

மனுதாரர் கேட்டுக்கொண்டதன்பேரில் சாட்சியம் சொல்ல வந்தேன். விபத்தானது 11.2.2025 ல் இரவு 10 முதல் 10.30 க்குள் நிகழ்ந்தது. எனது உறவினரை பார்ப்பதற்காக அந்த சமயம் சிக்னலுக்காக காத்திருந்தேன். அந்த சாலை இருவழி சாலையாகும். விபத்து புகாரை போலீசில் நான் கொடுக்கவில்லை.கண்டைனர் லாரி மோதியதால் இறந்தவருக்கு வலது கால் பாதிப்பானது. ஆம்புலன்ஸ்க்கு அங்கு இருந்த வேறு ஒருவர் தகவல் சொன்னார். விபத்து குற்ற வழக்கில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளித்தேனா என்றால் இல்லை. போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் சம்பவ இடத்தில் வந்து தொலைபேசி எண் பெற்று சென்றார்கள் ஆனால் என்னை விசாரிக்கவில்லை. இறந்தவர் Helmet அணியவில்லை என்றால் சரியல்ல.

இறந்தவரின் கவனக்குறைவால் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. மனுதாரருக்கு உதவும் பொருட்டு பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

X

என்னால் தட்டச்சருக்கு திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவர் சரி என ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

தேதி:09.07.2026.

MATHUSUTHANAN P Digitally signed by MATHUSUTHANAN P

தலைமை நீதிபதி,
சிறுவழக்குகள் நீதிமன்றம்.